Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 08, 2021

புதன்கிழமை செப்டெம்பர் 08, 2021 | ஒளி: 07 கதிர்: 95 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## கர்ப்பிணிகளின் கவனத்துக்கு...

கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகின்றமை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

“ஆகையால் கர்ப்பிணிகள் கொரோனா தடுப்பூசிகளை உடனடியாக பெற்றுக்கொள்ள வேண்டும்” என குடும்பநல சுகாதார பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா கூறியுள்ளார். கர்ப்பிணி தாயொருவருக்கு எப்படியாவது கொரோனா தொற்று ஏற்படுமாயின்,

தொடர்ச்சி P2

# 160,000 கோடி ரூபாய் வருமானம் இழப்பு



**நன்கொடையாளரின் நிபந்தனைகளுக்கு இலங்கை உடன்படாது**

**நிலைமையை எதிர்கொள்ள அரசாங்கம் தயாரில்லை**

கொரோனா தொற்று காரணமாக இலங்கை அரசாங்கம் 160,000 கோடி ரூபாய் மொத்த வருமானத்தை இந்த வருடம் இழந்துள்ளது என்று நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் நேற்று (07) தெரிவித்தார்.

நிதி மற்றும் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு சட்டமூலம் தொடர்பான மீதான விவாதத்தின் போதே அமைச்சர் இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

தேசிய பட்டியலின் ஊடாக எம்.பியாக தெரிவு செய்யப்பட்ட பெசில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் நேற்று (07) முதன்முறையாக உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு விதிக்கப்பட்டதில் இருந்து 70 சதவீதம் மறைமுக வரி வருவாய் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

“உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருவாய் நாடு முடக்கப்பட்டமையால் கடுமையாக குறைந்துள்ளது" என்றும் குறிப்பிட்டார்.

“செலவினங்களுடன் ஒப்பிடும்போது மொத்த வருவாய் வெகுவாக குறைந்துள்ளது. இலங்கையின் அரச செலவுகள்,

தொடர்ச்சி P2

# அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வாய்ப்பில்லை

**இந்த அரசாங்கம் ஆர்ப்பாட்டங்களுக்காக தனியான இடத்தை ஒதுக்கியது**

**நுகர்வோர் சட்ட ஏற்பாடுகள், சீனி, அரிசி தொடர்பான நெருக்கடிகளை குறைப்பதற்குப் பலமற்றவை**

**உணவு தொடர்பாக சமூக நிலையை கவனத்தில் கொண்டு, அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது**

*மகேஸ்வரி விஜயனந்தன்*

அமல்படுத்தப்பட்டிருக்கும் அவசரகாலச் சட்டத்தை நீண்டகாலம் அவ்வாறே அமல்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, சீனி, அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பான நெருக்கடிகளை குறைப்பதே இச்சட்டத்தின் நோக்கம் என்றார்.


அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (7) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், “நாட்டில் யுத்தம் ஒன்று இல்லாத போது, எதற்காக அவசரகால சட்டம்” என ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உள்ள சில ஏற்பாடுகள் பலமற்றவை என புரிந்து கொள்ளப்பட்டவுடன், அந்த ஏற்பாடுகளைப் பலப்படுத்த தேவையான சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அதனை நிறைவு செய்ய சிறிது காலம் செல்லும் என்பதால், சட்டமா அதிபரின் அனுமதியுடன் அதனை நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தும் காலம் மற்றும் பாராளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்றும் கால அளவை ஆராய்ந்து, குறித்த சட்டக் கட்டமைப்பை பலப்படுத்தும் வரை, உணவு தொடர்பான தற்போதைய சமூக நிலையை கவனத்தில் கொண்டு, அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2


## மகளுக்கு யமனான தாயின் சேலை



11 வயது சிறுமியொருத்தி, சேலையில் கட்டப்பட்ட ஊஞ்சலில் விளையாடிக்கொண்டிருந்த போது, கழுத்து இறுகி பலியான சம்பவம் தெரணியகலை, மாலிபொட பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

கெரோனிடா தில்மினி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அச்சிறுமி, மனது 9, 7 வயதான சகோதரர்களுடன் படுக்கையறையில் கட்டப்பட்ட ஊஞ்சலில் விளையாடியுள்ளார்.

தொடர்ச்சி P2




## பரீட்சை ஒத்திவைப்பு

2020 மற்றும் 2021 ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி ஆண்டு பரீட்சை, காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது நிலவும் கொரோனா தொற்று நிலையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அறிவித்துள்ள பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித, பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி ஆண்டு பரீட்சையை எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெங்காயத்துக்கு தீர்வை

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் கிலோகிராம் ஒன்றுக்கு, 40 ரூபாய் இறக்குமதி பொருள்களுக்கான விசேட தீர்வையாக அறவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் (6) இடம்பெற்ற அமைச்சரவை சந்திப்பிலேயே, இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

தேசியளவிலான பெரிய வெங்காய உற்பத்தி போதியளவு உள்ளூர் சந்தைகளில் கிடைத்து வருகிறது. இந் நிலையில், தேசிய உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் நடவடிக்கையாக இறக்குமதி தீர்வை அறிவிட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## விகிதாசார, கலப்பு முறை தேர்தலுக்கு ஈ.பி.டி.பி பரிந்துரை



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை விகிதாசார முறையிலும் பாராளுமன்ற மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை கலப்பு முறையிலும் நடத்த வேண்டியதன் அவசியத்தினை (ஈ.பி.டி.பி) தெளிவுபடுத்தியுள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளில் மாற்றம் செய்வது தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவினருக்கு நேற்று முன்தினம் (06) ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியால், தமது முன்மொழிவுகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

கொரோனா சடலங்கள்

## வடக்கு, கிழக்கில் தேக்கம்

**எரிவாயு, மின்தகன மேடைகளை கோருகிறது கூட்டமைப்பு**



*பா.நிரோஸ்*

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொரோனா சடலங்கள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, எரிவாயு, மின்தகன மேடைகளை வடக்கு,

தொடர்ச்சி P2

## அதிபர், ஆசிரியர்கள் மீண்டும் கடமைகளுக்குத் திரும்புவர்



*மகேஸ்வரி விஜயனந்தன்*

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வை ஏற்றுக்கொண்டு, அதிபர், ஆசிரியர்கள் மீண்டும் கடமைகளுக்கு திரும்புவார்கள் என நம்புவதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண,

தொடர்ச்சி P2

## எலிக் காய்ச்சலால் 204 பேர் மரணம்




*பா.நிரோஸ்*

எலிக் காய்ச்சலால் இலங்கையில் பலர் உயிரிழந்து வருகின்றனர் எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, 2019ஆம் ஆண்டு 100 பேரும், 2020ஆம் ஆண்டு 104 பேரும் உயிரிழந்துள்ளனர் என்றார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி செயலாளரின் விசேட அறிவிப்பு



மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அதிகாரம் இல்லை என எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் செய்த உரைகள், பொதுமக்களை தவறுதலாக வழிநடத்துவதாக அமைந்துள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## நாட்டை தொடர்ந்தும் மூடி வைத்திருக்க முடியாது

*ஷேன் செனவிரத்ன*

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்தியுள்ளது. எனினும், சிலர் அநாவசியமான முறையில் பயணங்களை மேற்கொண்டு வைரஸை பரப்புகின்றனர் எனத் தெரிவித்த அஸ்கிரிய மாநாயக்க தேரர் வராகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர், நாட்டை தொடர்ந்தும் மூடி வைத்திருக்க முடியாது. ஆகையால் மக்கள் பொறுமையுடன் நடந்துகொள்ளவேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

# யோசித்தவுக்காக கப்ரால் பதவியைத் துறக்கிறார்

**பதிலளிக்க கப்ரால் மறுப்பு**


*பா.நிரோஸ்*

இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகி, பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் யோசித ராஜபக்ஷவுக்கு வழங்கப் போகிறீர்களாமே என்கிற எதிர்க்கட்சியின் கேள்விக்கு, நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் பதிலளிக்க மறுத்துள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சமன் பிரியந்த

தொடர்ச்சி P2





## சிறிய நில நடுக்கம் பதிவு

இலங்கையில் நேற்றுக்காலை 10.38 மணியளவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2.4 ரிக்கடர் அளவிலேயே ஹம்பாந்தோட்டை, லுணுகம்வேஹரவில் நில நடுக்கம் பதிவாகியுள்ளது என புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 160,000 கோடி ரூபாய் வருமானம் இழப்பு

பல நூற்றாண்டுகளாக வருவாயை விட அதிகமாக இருப்பதால் இதற்கு தொற்றுநோய் முற்றிலும் காரணம் அல்ல "என்று அவர் தெரிவித்தார்.

"நாங்கள் மிகுந்த சிரத்தையுடன் வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளோம். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களுடன் சலுகை கடன் திட்டங்களுக்கு மட்டுமே பணியாற்றுவோம் மற்றும் வெளிநாடுகளிடம் கடன் வாங்கும் போது எந்த நன்கொடையாளரும் விதிக்கும் அரசியல் அடிப்படையிலான நிபந்தனைகளுக்கு இலங்கை உடன்படாது "என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை என்றும் நிதி நெருக்கடியில் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வாய்ப்பில்லை

தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்த பின்னர், இந்த நாட்டில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன, கொரோனா முடக்கத்திலும் பல ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தெரிவித்த அவர், இந்த அரசாங்கம் ஆர்ப்பாட்டங்களுக்காக தனியான இடத்தை ஒதுக்கியதே தவிர, தண்ணீர்ப்பிரயோகமோ, தாக்குதல் நடத்தவோ இல்லை என்றார்.

## அதிபர், ஆசிரியர்கள் மீண்டும் கடமைகளுக்குத் திரும்புவர்

அமைச்சரவை உப-குழுவால் திட்டமிடப்பட்ட இடைக்கால கொடுப்பனவு, இம்மாத சம்பளத்துடன் ஆசிரியர்- அதிபர்களுக்கு கிடைக்கும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (7) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

அதிபர்-ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் அரசாங்கத்தால் தீர்வுத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார மற்றும் நிதி சூழ்நிலையில் அரசாங்கம் வழங்கக் கூடியசம்பள உயர்வு குறித்துமிகத் தெளிவாக அறிவித்துள்ளோம்.

இந்த அதிகரிப்பை ஒரே தடவையில் வழங்குமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், தற்போதைய நிதி நிலைமையின் கீழ் இதனை 3 சந்தர்ப்பங்களில் வழங்க வாய்ப்புள்ளதாக கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார் என்றார்.

இத தொடர்பில் அரசாங்கம் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறதென தெரிவித்த அவர், சம்பளம் தொடர்பான முன்மொழிவு அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் ஊடாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது என்றார்.

இதனால் தான் ஆசிரியர்- அதிபர்களுக்கு இடைக்கால கொடுப்பனவை வழங்க முன்வந்தோம்.

அரசாங்கம் தனது திறனுக்கு ஏற்றவாறு இதனைத் செய்வதால், அதனை ஏற்றுக்கொண்டு அதிபர்- ஆசிரியர்கள் மீண்டும் தமது பணிகளுக்கு திருப்புவார்கள் என நம்புகிறோம் என்றார்.

## வடக்கு, கிழக்கில் தேக்கம்

கிழக்கில் உடனடியாக அமைக்க நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சபையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (07) நடைபெற்ற விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களை சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய எரிப்பதற்கு அவசியமான எரிவாயு மின்தகனமேடைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போதியளவு இல்லை. இதனால் வடக்கு கிழக்கில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் அதிகளவில் தேங்கிக் கிடக்கின்றன என்றார்.

குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் மாத்திரமே எரிவாயு மின்தகன மேடைகள் உள்ளன. மட்டக்களப்பில் இல்லை. எனவே நிதி அமைச்சர் அவசரமான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு தற்காலிகமாகவேனும் எரிவாயு மின்தகனமேடைகளை அமைத்து கொரோன வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை எரியூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## விகிதாசார...

இதன்போது, மாகாண சபை மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றிற்கான தேர்தல்கள் கலப்பு முறையில் நடைபெற வேண்டும் என்று தெரிவித்துள்ள ஈ.பி.டி.பி, தொகுதிவாரியாக 150 உறுப்பினர்களும் விகிதாசார முறையில் 75 உறுப்பினர்களுமாக 225 பாராளுமன்ற உறப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளதுடன், தொகுதிவாரியாக 125 உறுப்பினர்களும்,விகிதாசார முறையில் 100 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவதை தாங்கள் எதிர்க்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

## யோசித்தவுக்காக கப்ரால் பதவியைத் துறக்கிறார்

ஹேரத், "நிதி இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்கு நீங்கள் தீர்மானித்துள்ளதாகவும் உங்களுக்கு வேறு ஒரு உயர் பதவி காத்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இது உண்மையா?" என்றார்.

எனினும், இடையீட்டு கேள்வியானது, தான் பதிலளித்த கேள்வியுடன் தொடர்புப்படாத கேள்வியாகும் எனக் கூறிய இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், இராஜினாமா தொடர்பான கேள்விக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார்.

## கர்ப்பிணிகளின் கவனத்துக்கு...

சாதாரண நபரொருவர் தொற்றுக்குள்ளாவது போலன்றி அதிக சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக கர்ப்பிணி தாய்மார்கள் நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கப்படுவது முக்கியம் என கூறிய விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா, அவர்கள் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## மகளுக்கு யமனான தாயின் சேலை

சிறுமியின் தந்தை மாலிபொட தோட்டத்துக்கு வேலைக்குச் சென்றிருந்ததுடன், அவரது தாய் சமையலில் ஈடுபட்டுக்கொண்டு இருந்துள்ளார்.

பின்னர் தனது சமையல் வேலைகளை முடித்துவிட்டு, தாயார் சிறுவர்கள் விளையாடிய அறைப் பக்கம் சென்ற போது, அறையின் கதவு உள்ளே தாழ்ப்பாள் இடப்பட்டிருந்தது. யன்னல் வழியே தாய் உள்ளே பார்த்துள்ளார்.

இதன்போது, தனது மகள் ஊஞ்சலில் இறுகிய நிலையில் இருந்ததை அவதானித்து, அயலவர்களின் உதவியுடன் மீட்டு, தெரணியகல வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை தெரணியகல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

## சிறிய நில நடுக்கம் பதிவு

இந்த அதிர்வினால் எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்னரும் லுணுகம்வேஹரவில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எலிக் காய்ச்சலால் 204 பேர் மரணம்

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துக்கொண்டு வாய்மூல வினாவுக்கு விடையளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எலிக் காய்ச்சல் ஏற்பட்ட நோயாளர்கள் தொடர்பான தகவல்கள் அந்த நோயாளரின் பிரதேசத்துக்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரிக்கு வழங்கப்படும். இவர்கள் நோயாளரின் வீட்டுக்கு சென்று எவ்வாறு அந்த நோய் பரவியது என்பது தொடர்பில் ஆராய்வார்கள் என்றார்.

மேலும் எலிக் காய்ச்சலுக்கான நோய் அறிகுறிகளைக் கொண்டவர்கள் நோயாளரின் வீட்டில் இருந்தால் அவர்களுக்கு தேவையான சிகிச்சையளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டியவில் இருந்து அம்பாறைக்கு

## 350 யூரியா உர மூடைகளை அத்தியாவசியமாக கடத்திய இருவர் கைது

கனகராசா சரவணன்

எம்பிலிப்பிட்டியில் இருந்து அம்பாறை, நிந்தவூர் பிரதேசத்திற்கு லொறி ஒன்றில் அத்தியாவசிய சேவைகள் என்ற பெயர் பலகை இடப்பட்டு 350 உர மூடைகள் கொண்ட யூரிய உரத்தை கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிந்தவூர் பிரதேசத்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை (07) மாலை 5 மணிக்கு அம்பாறை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிசார் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு லொறி மடக்கிப் பிடிக்கப்பட்டது.

## நாட்டை தொடங்கும் மூடி வைத்திருக்க முடியாது

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிப்பதற்கு அரசாங்கமும் சுகாதார பிரிவினரும் கடுமையான அர்ப்பணிப்புகளை மேற்கொள்கின்றனர். அதிலிருந்து நல்ல பதில் கிடைக்கவேண்டுமாயின் மக்கள் பொறுமையாக இருக்கவேண்டும்.

கண்டி தேசிய வைத்தியசாலையில், கொரோனா அவசர பிரிவிக்கு 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒக்சிசன் தொகுதிகள் இரண்டை கையளித்துவிட்டு அங்கிருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவுதலை தடுப்பதற்காக நாட்டை தொடர்ச்சியாக மூடியே வைத்திருக்கமுடியாது. இதனை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு தொடர்ச்சியாக நாட்டை மூடியிருந்தால், நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றார்.

இன, மத மற்றும் அரசியல் இலாபங்களைத் தேடிக்கொள்ளாது. ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகவே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றார்




## பதக்கம் வென்றோர் நாடு திரும்பினர்

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற டோக்கியோ பாராலிம்பிக் போட்டிகளில் முறையே தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற தினேஷ் பிரியந்த ஹேரத் மற்றும் சமித துலன் கொடித்துவக்கு ஆகியோர், ஸ்ரீ லங்கன் ஏயார்லைன்ஸ் விமானத்தின் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று மாலை வந்தடைந்தனர்.

ஜப்பானின் நரிடா சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஸ்ரீ லங்கன் ஏயார்லைன்ஸ் விமானம் நேற்று மாலை 4.20 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, விளையாட்டுத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலர் விளையாட்டு வீரர்களை வரவேற்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் திரண்டிருந்தனர்.

## 665 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ், நேற்று (07) காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 665 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறுவோர் தொடர்பில் கண்காணிப்பதற்கு மேல் மாகாணத்தில் 13 வீதித்தடைகளில் சோதனைகள் நிறுவப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பகுதிகளில் 541 வாகனங்களும் மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்கும் பகுதிகளில் 632 வாகனங்களும் நேற்றுமுன்தினம் (06) சோதனையிடப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 66,668 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி செயலாளரின் விசேட அறிவிப்பு

> "மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உட்பட உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு பூரண அதிகாரம்

பொதுமக்கள் பாதுகாப்பு ஆணையின் ஐந்தாவது பிரிவின் அடிப்படையில், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உட்பட உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு பூரண அதிகாரம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உரித்தாவதாக ஜனாதிபதி செயலாளர் தெரிவித்துள்ளார்.

நெல், அரிசி, சீனி உட்பட அத்தியாவசிய உணவுப்பொருட்களை மொத்தமாக பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பதன் மூலம் நுகர்வோருக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வியாபாரிகளின் முறைகேடுகளை தடுக்கும் பொருட்டு ஜனாதிபதி பொதுமக்கள் பாதுகாப்பு ஆணை சட்டத்தின் கீழ் அத்தியாவசிய உணவு விநியோகம் தொடர்பான கட்டாய விதிமுறைகளை அமுல்படுத்தினார்.

அவ்விதிமுறைகளை செயற்படுத்தி நெல், அரிசி, சீனி உட்பட நுகர்வுப் பொருட்களை பகிர்ந்தளிப்பதை ஒருங்கிணைப்பதற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தை ஜனாதிபதி நியமித்தார்.

அரசாங்கத்தின் உத்தரவாத விலை அல்லது இறக்குமதி விலையினை அடிப்படையாகக் கொண்டு அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு சாதாரண விலையில் விற்பனை செய்வதற்காக அதிகாரிகளை கொண்டு நடத்துவதற்கும், மொத்த கொள்முதலுக்காக அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள், கடன் உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு ஆணை சட்டத்தில் இரண்டாவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவது தொடர்பான அவசரகால ஒழுங்கு விதிகள் அமுல்படுத்தப்பட்டன.

"கொரோனா இல்லாத நாடாக இலங்கை மாற்றப்படும்"

# ரஷ்ய சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு

இலங்கை எதிர்காலத்தில் கொரோனாவிலிருந்து விடுபட்டு பாதுகாப்பான நாடாக மாற்றப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, சுற்றுலா மேம்பாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக ரஷ்யா சென்றுள்ளார். அங்கு ரஷ்ய ஊடக நிறுவனங்களுக்காக சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அறிக்கை யொன்றையும் வெளியிட்டார். இதில் ரஷ்யர்கள் இலங்கைக்கு வருகை தரவேண்டுமெனவும் கொரோனாவிலிருந்து விடுபட்டு பாதுகாப்பான நாடாக மாற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது,பிராந்திய ஒத்துழைப்பு





இராஜாங்க அமைச்சர் தாரகா பாலசூரியவும் நிகழ்வுகளில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல புகழ்பெற்ற சுற்றுலாத் துறை பத்திரிகை நிருபர்களும் முக்கியஸ்தர்களும் பங்கேற்றனர்.



## மகஜர் கையளிக்கும் நிகழ்வு

புத்தளத்தில் வாழும் மூவின மக்களும் பயன் அடையும் வகையில் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE) ஒன்றை அமைத்துத் தருமாறு கோரி புத்தளம் கல்வி சீர்திருத்த சமூக அமைப்பினர் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமை சந்தித்து மகஜர் ஒன்றை கையளிப்பதை படத்தில் காணலாம். (படம்: ரஸீன் ரஸ்மின்)

# தொழில்நுட்ப குழுவிலிருந்து விலகினார் வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம

இலங்கையில் கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ,சுகாதார அமைச்சின் கொரோனா தொடர்பான தொழில்நுட்ப குழுவிலிருந்து விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம விலகியுள்ளார்.

இதேவேளை,அவரது இராஜினாமா, பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றை எதிர்கொள்வதற்கான நெறிமுறைகளை உருவாக்குவதில் வைத்தியர் ஆனந்த முக்கிய பங்கு வகித்தார் என்றும் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார். கொரோனா தொடர்பான தொழில்நுட்ப குழு எடுத்த முடிவுகளுடன் கருத்து வேறுபாடு காரணமாக, அக்குழுவில் இருந்து ஆனந்த விஜேவிக்ரம விலகியுள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் அவர் தனது முடிவை மறுபரிசீலனை



**"கொரோனா தொடர்பான தொழில்நுட்ப குழு எடுத்த முடிவுகளுடன் கருத்து வேறுபாடு காரணமாக, அக்குழுவில் இருந்து ஆனந்த விஜேவிக்ரம விலகியுள்ளதாகவும் அவர் தனது முடிவை மறுபரிசீலனை செய்து, எங்களுடன் இணைந்து கொள்ள வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்**

செய்து மீண்டும் எங்களுடன் இணைந்துகொள்ள வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் கேட்டுக்கொண்டுள்ளார்.

இரண்டு தடுப்பூசிகளையும் போட்டோர்

# 94 இலட்சத்துக்கும் அதிகம்

நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 94 இலட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுவரை 27.2 மில்லியன் தடுப்பூசிகள் நாட்டிற்கு கிடைத்துள்ளதாகவும், அவற்றில் 94 இலட்சத்து 14,852 பேருக்கு இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.



இதேவேளை, தற்போது 20 முதல் 29 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# விபசார விடுதியில் பெண்கள் உட்பட எழுவர் கைது

தெஹிவளை, ஹில் வீதியிலுள்ள விபசார விடுதியில் நேற்றுமுன்தினமிரவு நடத்தப்பட்ட சோதனையின் பின்னர், ஐந்து வெளிநாட்டுப் பிரஜைகள் உட்பட ஏழு பெண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின் போது விபசார விடுதியின் முகாமையாளரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபசார விடுதியின் முகாமையாளர் கொழும்பு -08 இல் வசிக்கும் 43 வயதானவர், அதே நேரத்தில் பெண்கள் 23-39 வயதுக்குட்பட்டவர்கள். இவர்கள், பாணந்துறை, வெள்ளவத்தை பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

விபசார விடுதியில் கைது செய்யப்பட்ட வெளிநாட்டு பெண்களின் விசாக்கள்



காலதாமதமாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் விசா நிபந்தனைகளை மீறி அதிக காலமாக தங்கியிருந்ததாக முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும், இந்த விபசார விடுதி பல சமூக ஊடக தளங்கள், இணையதளங்களில் விளம்பரப்படுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தயாரித்த

# முதலாவது சேலைன் கையளிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ், கண்டி, பல்லேகல கைத்தொழில் பேட்டையில், தனியார் நிறுவனமும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமும் இணைந்து சேலைன் தயாரிப்பை ஆரம்பித்திருந்தது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தயாரித்த முதலாவது சேலைன் தொகை, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவிடம் கையளிக்கப்பட்டது.

மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டொக்டர் உத்பல இந்திரவன்ச இந்த சேலைன் தொகையை இராஜாங்க அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். சேலைன் வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கடந்த காலங்களில் தோல்வி கண்டமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீர் குழாய்க் கிணறுகள் கையளிப்பு

ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் 50 வறிய குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் குழாய்க் கிணறுகள் பயனாளிகளிடம் திங்கட்கிழமை (06) கையளிக்கப்பட்டன. சமூக சேவையாளரும், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் புத்தளம் மாவட்ட பணிப்பாளருமான முஜாஹித் நிஸார் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, அகில இலங்கை இளம் முஸ்லிம் மாதர் அமைப்பு ஊடாக குறித்த குடிநீர் குழாய்க் கிணறுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை இளம் முஸ்லிம் மாதர் அமைப்பின் தலைவி டொக்டர் பவாஸா தாஹாவின் வழிகாட்டலில், அகில இலங்கை வை.எம்.



எம்.ஏ பேரவையின் புத்தளம் மாவட்ட பணிப்பாளர் முஜாஹித் நிஸாரின் மேற்பார்வையில் ஏத்தாளை, பள்ளிவாசல்துறை, முசல்பிட்டி, திகழி, கற்பிட்டி பகுதிகளில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட 50 வறிய குடும்பங்களுக்கு இவ்வாறு குடிநீர் குழாய்க் கிணறுகள் வழங்கப்பட்டுள்ளன.




## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்றுமுன்தினம் (06) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### ஒரு கட்டடத்தை நிறுவுதல்

வெளிவிவகார அமைச்சு இயங்கி வருகின்ற ஜனரஜ கட்டடத்தில் போதுமானளவு இடவசதியின்மையால் பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. அதற்கமைய புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணித்துண்டை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வித்யா மாவத்தையில் அமைந்துள்ள தற்போது தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்ற காணியிலிருந்து ஒதுக்கிக் கொள்வதற்கு அங்கிகாரம் கிடைத்துள்ளது.

### மகாவலி பொருளாதார வலயம்

மகாவலி ஆற்றில் வழிந்தோடும் மேலதிக நீரை வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணங்களில் காணப்படும் கிளை ஆற்றுப்படுக்கைகளில் வாழும் கிராமிய மக்களின் விவசாயப் பொருளாதார செயன்முறைக்காக பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும், குறித்த பிரதேசங்களில் குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளுக்கான நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான முன்னுரிமை கருத்திட்டமாக மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

எதிர்வரும் நான்கு வருடங்களில் 88.9 கிலோமீற்றர்கள் நீளமான வயம்பஎல, 95.7 கிலோமீற்றர்கள் நீளமான வடமத்திய மஹஎல போன்ற செயற்கை ஆறுகள் இரண்டையும் நிர்மாணிப்பதற்கும், 07 புதிய நீர்த்தேக்கங்கள் மூலம் 1,500 கிராமியக் குளங்களைப் போசிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல், தற்போது தெதுறு ஓயாவை குறுக்கறுத்து நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் பணிகள், அதன்கீழுள்ள கட்டுமானங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த கருத்திட்டத்தின் கீழ் 200 சிறிய குளங்கள் மூலம் 25,000 ஏக்கர்களில் இருபோகங்களும் பயிரிடக்கூடிய வகையில் நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கும். அதற்கமைய, குருநாகல், புத்தளம், அநுராதபுரம், மாத்தளை மாவட்டங்களில் 26 பிரதேச செயலகப் பிரிவுகள், 410 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பு அதிகார எல்லைப் பிரதேசத்தை, மகாவலி விசேட அதிகார பிரதேசமாக பிரகடனப்படுத்த அமைச்சரவை அங்கிகாரம்

### இடர்பாடுகளுக்கு சலுகை வழங்கல்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுத்துள்ள இடர்பாடுகள் அடையாளம் காணப்படவுள்ளன.

அடையாளம் காணப்படவேண்டியவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான தரவுத் தொகுதியொன்றை தயாரித்துக் கொள்வதற்கும் பொறிமுறையொன்றை முன்மொழிவதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உகந்த சலுகைகள் தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### குத்தகை அடிப்படையில் காணி

இலங்கையின் திரவப்பால் தேவையின் 40 சதவீதமானவை உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுவதுடன், ஏனையவற்றை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் 50 பில்லியன் ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. அதனால், பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமையொழிப்புக்கான ஜனாதிபதி செயலணியால் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான யோசனைகள் இலங்கை முதலீட்டு சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை முதலீட்டுச் சபை, ஆர்வம் காட்டும் முதலீட்டாளர்களின் யோசனைகளைக் கோரியுள்ளதுடன், குறித்த சபையின் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கருத்திட்ட யோசனைகளை சமர்ப்பித்தவர்களுக்கு தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான பண்ணைகளில் தற்போது பயன்படுத்தாத காணிகள் மற்றும் பயன்பாட்டுக்கு உட்படுத்தாத ஏனைய அரச காணிகளை நவீன பாற் பண்ணைகளாக அபிவிருத்தி செய்வதற்காக கீழ்க்குறிப்பிட்ட வகையில் 30 வருடங்கள் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளது. H.B.K.I.R International Investment/ Access Agro (Pvt) Ltd நிறுவனத்திற்கு 700 ஏக்கர்கள் மற்றும் Pesara Logistics நிறுவனத்திற்கு 60 ஏக்கர்களும் தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நிக்கவெரட்டிய பகுதியில் அமைந்துள்ள பண்ணையில் ஒதுக்கி வழங்கல். அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான கலபொடவத்த பெருந்தோட்டம் மற்றும் மவுன்ட் ஜின் தோட்டங்களில் 811 ஏக்கர்கள் Farm's Pride (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தெல்தொட்ட பெருந்தோட்டம் மற்றும் க்றேவ் வெலி தோட்டங்களில் முறையே, 200 ஏக்கர்கள் மற்றும் 150 ஏக்கர்களை Hillside Agro (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான கொட்டுக்கச்சிய பண்ணையில் 250 ஏக்கர்களை Gamma Pizzakraft (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒதுக்கி வழங்கல்

### நிலக்கண்ணி வெடிகளுக்குத் தடை

ஆட்களை அழிக்கும் (Anti - personnel mines) நிலக்கண்ணி வெடிகளைப் பாவனை செய்தல், இருப்பில் வைத்திருத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் இடமாற்றம் செய்தல் போன்றவற்றை தடை செய்தல் மற்றும் அவற்றை அழித்தல் தொடர்பான சமவாயத்தின் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்காக சட்டத்தை வகுப்பதற்கான பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்குண்டு. சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது அமைச்சரவையும் அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### தொழிநுட்ப பூங்காக்களை அமைத்தல்

காலி, குருநாகல், அநுராதபுரம், கண்டி, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் 05 தொழிநுட்ப பூங்காக்களை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, அதிவேக நெடுஞ்சாலைக்கு அணுகக்கூடிய வசதிகள், சுற்றுலாப் பயணிகளைக் கர்ந்திழுக்கக் கூடிய, தேவையான மனித வளத்துடன் கூடியதும் ஏனைய இதர சேவைகளைக் கருத்தில் கொண்டு குறித்த தொழில்நுட்பப் பூங்காக்களை அமைப்பதற்குப் பொருத்தமான இடங்கள் தொழில்நுட்ப அமைச்சால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 'நெணச' கல்வி அலைவரிசையை அதிகரித்தல்

கல்வி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலமான இரண்டு அலைவரிசைகள் மூலம் டயலொக் நிறுவனம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 'நெணச' எனும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியது. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் டயலொக் நிறுவனத்தால் கிட்டத்தட்ட 2,200 பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிகள், டயலொக் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த இணைப்புக்களுக்கு மாதாந்தக் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்பட்டது.

கொவிட் - 19 பெருந்தொற்றுக் காரணமாக கல்வித் துறையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையை தொடர்ந்து மேற்கொள்வதற்காக 'நெணச' கருத்திட்டத்தில் புதிய இரண்டு அலைவரிசைகள் உள்ளடங்கலாக 04 அலைவரிகள் மூலம் 2021 செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கும், 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் மொத்த அலைவரிசைகளின் எண்ணிக்கையை 10 ஆக அதிகரிப்பதற்கும், டயலொக் நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பாம்புகளைக் கண்டால்

# அறிவிக்கவும்

■ எம்.றொசாந்த்



இணுவில், காரைக்கால் சிவன் கோவிலை அண்மித்த பகுதிகளில் நாக பாம்புகள் உள்ளிட்ட பாம்புகள், விஷ ஜந்துகளைக் கண்ணுற்றால் சமூக பொறுப்புடன் 077-9507269 எனும் அலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு, நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சி.கௌசல்யா கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், சிலரின் வீடுகள், விவசாய காணிகளுக்குள் வரும் நாக பாம்பு உள்ளிட்ட விஷ ஜந்துகளை உயிருடன் பிடித்து வந்து, சிவன் கோவிலை அண்டிய பகுதிகளில் விட்டு செல்கின்றனர் எனச் சாடினார்.

இந்துக்கள் மத்தியில், நாக வழிபாட்டு முறை உள்ளமையால், நாக பாம்பை அடித்துக் கொல்வதற்கு பலருக்கும் தயக்கம் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், அதனால் அதனை உயிருடன் பிடித்து, வந்து கோவில் சூழலில் விட்டு செல்கின்றனர் எனவும் கூறினார்.

புராதன கோவிலான காரைக்கால் சிவன் கோவிலைச் சுற்றி, பல பாம்புப் புற்றுகள் உள்ளன. அந்தப் புற்றுகளுக்குள் தற்போது நாக பாம்பு உள்ளிட்ட பாம்புகள் குடி கொண்டுள்ளன,

இந்நிலையில், நாகபாம்புகள் கோவிலை அண்மித்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள்ளும் விவசாய காணிகளுக்குள்ளும் படையெடுக்கின்றன. இதனால் அப்பகுதி மக்கள், பாம்புகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு சென்றதை அடுத்து, அவர்கள் மூலம் வனவிலங்கு பாதுகாப்பு துறையின் உதவி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன் மூலம், கோவில் சூழலில் நாக பாம்புகள் உள்ளிட்ட பாம்புகள் , விஷ ஜந்துக்களை கண்ணுற்றால் சமூக பொறுப்புடன் 077-9507269 எனும் அலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அறிவிக்கவும்.

இதேவேளை, கோவிலை அண்மித்த பகுதிகளில், பாம்புகள் உள்ளிட்ட விஷ ஜந்துக்களை கொண்டுவந்து உயிருடன் விடுவதை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று முதல் நாளை மறுதினம் வரை

## தடுப்பூசி செலுத்தும் பணி முன்னெடுப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஏனைய சுகாதார சிகிச்சை மையங்களில் தடுப்பு மருந்துகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இன்றும் (08) நாளையும் (09), நாளை மறுதினமும் (10) நட்டாங்கண்டல் வைத்தியசாலையிலும் அனிஞ்சியன்குளம் பாடசாலையிலும் தடுப்பூசி பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



உயிலங்குளம் புனரமைப்பு:

## தொடர்ந்தும் வலியுறுத்தல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, துணுக்காய் கமநல சேவைகள் திணைக்கத்தின் கீழுள்ள உயிலங்குளத்தை புனரமைப்பதற்கான கோரிக்கைகளை தொடர்ந்து முன் வைத்திருப்பதாக, கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் த.பிரியதர்ஷினி தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், உயிலங்குளத்தில் 63 பயனாளிகள் 139 ஏக்கர் வயல் காணிகளில் பயிர் செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குளத்தைப் புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் ஆரம்பத்தில் செய்யப்பட்டன. அதற்கென, 10 மில்லியன் ரூபாய் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அதிகரித்த அளவில் தேவை காணப்படுகின்றது எனவும் கூறினார்.

இதேவேளை, குறித்த அணைக்கட்டின் ஊடாக துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட விவசாய கிராமங்களுக்கான பாதையாக காணப்படுகின்ற நிலையில், குளத்தின் அணைக்கட்டின் ஊடாகவே பயணம் மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே, அணைக்கட்டுக்கு கீழான பகுதியில் வீதி அமைக்கப்படும் போது தான் குளத்தைப் புனரமைக்க கூடியதாக இருக்கும் என்றும், அவர் தெரிவித்தார்.

நினைவுத்தூபி அமைத்தமை தொடர்பாக

## சச்சிதானந்தனிடம் விசாரணை

■ எம். றொசாந்த், எஸ். நிதர்ஷன்



காணாமலாக்கப்பட்டோர் நினைவாக நினைவுத்தூபி அமைத்தமை தொடர்பாக தன்னிடம் பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தியதாக, மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மறவன்புலவு பகுதியில் காணாமலாக்கப்பட்டோர் நினைவாக, மறவன்புலவு சச்சிதானந்தத்தால் கல்வெட்டுகளுடன் நினைவுத்தூபி அமைக்கப்பட்டு அண்மையில் திறக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, பொலிஸ் உயர் அதிகாரிகள் தன்னிடம், ஞாயிற்றுக்கிழமை (06), விசாரணை நடத்தியதாக, மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இதன் போது, 'ஈழம் என்றால் என்ன?' என்று தன்னிடம் விசாரணை மேற்கொண்டதாகவும், அவர் கூறினார்.

19 வயது யுவதியை இலங்கைக்கு அனுப்பிய

## பெண் உட்பட நால்வர் கைது

■ எஸ்.றொசேரியன் லெம்பேட், சுப்பிரமணியம் பாஸ்கரன்

தனுஷ்கோடி கடல் வழியாக, நாட்டுப்படகில், இலங்கை பெண் ஒருவரை சட்டவிரோதமாக இலங்கைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி ஏமாற்றிய பெண் உட்பட 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு, சட்டவிரோதமாக தப்ப முயன்ற, முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த சிவனேசன் கஸ்தூரி (வயது 19) என்ற யுவதி, நேற்று முன்தினம் (06) காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தனுஷ்கோடியில் இருந்து நாட்டு படகு மூலம் சட்டவிரோதமாக முல்லைத்தீவுக்கு புறப்பட்டுள்ளார். அப்போது, தனுஷ்கோடி அடுத்த இரண்டாம் மணல் திட்டு பகுதியில் வைத்து, இந்திய கடலோர காவல்படையினரின் ரோந்து படகு வந்ததை அறிந்த படகோட்டி, குறித்த பெண்ணை, முதல் மணல் திட்டு பகுதியில் இறங்கி விட்டு சென்றதாக கூறப்படுகிறது.

குறித்த பெண்ணை, கைது செய்த மெரைன் பொலிஸார், இலங்கைக்கு சட்டவிரோதமாக அழைத்துச் செல்வதாக கூறி, பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றிய மீனவர் முனீஸ்வரன், படகில் ஏற்றிச் சென்ற முனிராஜ், சிபிராஜ், சின்னப்பாலத்தை சேர்ந்த மீனவப் பெண் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள், நேற்று (07) காலை இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, 19 வயதான முள்ளியவளை பெண் உட்பட 5 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.



## மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்களால், மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்னால், நேற்று (07) காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

காலை 9 மணி தொடக்கம் காலை 11 மணி வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீண்ட காலமாக வழங்கப்படாமல் உள்ள மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்க கோரியே, குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக, தற்போதைய கொரோனா காலப்பகுதியில் தமது சாதாரண கடமையை விட அதிக நேரம் கடமையாற்றுவதாகவும், குறிப்பாக அன்ரடிஜன், பி.சி.ஆர் பரிசோதனைகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டவர்களை பராமரித்தல் உள்ளிட்ட மேலதிக கடமைகளை மேற்கொண்டாலும், இதுவரை தமக்கான மேலதிக நேர கொடுப்பனவை வழங்கவில்லை என, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து, கோரிக்கை அடங்கிய மகஜர், வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அம்பாறையில் அத்தியாவசியப் பொருள்கள்

# பதுக்கலா?

### முறைகேடுகள் தொடர்ந்தால் நடவடிக்கை என்கிறார் றிஸ்லி முஸ்தபா

■ அஸ்லம் எஸ்.மௌலானா



அம்பாறை மாவட்டத்திலுள்ள சதொச நிலையங்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விற்பனையின் போது இடம்பெறும் முறைகேடுகள், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என, பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளரும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் சபை உறுப்பினருமான றிஸ்லி மயோன் முஸ்தபா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்முறைகேடுகள் நிரூபிக்கப்படுமாயின் சம்மந்தப்பட்டோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமலில் இருக்கும் நிலையில், பொது மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை சதொச நிலையங்கள் மூலம் நிர்ணய விலையில் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

எனினும், அம்பாறை மாவட்டத்திலுள்ள சதொச நிலையங்கள் மூலமாக, பொது மக்களுக்கு சரியான முறையில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படாமல், அவற்றைப் பதுக்கி வைத்து, மொத்த வியாபாரிகளுக்கும் தெரிந்தவர்களுக்கும் வழங்கப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

குறிப்பாக, மீன் டின்கள், மைசூர் பருப்பு, பெரிய வெங்காயம், கோதுமை மா, பால்மா, அரிசி, சீனி போன்ற பொருட்கள், சதொச நிலையங்களுக்கு நாளாந்தம் வருகின்ற போதிலும், மக்களுக்கு நேரடியாக நிர்ணய விலையில் இந்தப் பொருள்களை வழங்காமல், அவற்றைப் பதுக்கி வைப்பதும் மொத்த வியாபாரிகள், தெரிந்தவர்களுக்கு மாத்திரம் கொடுப்பதும் மக்களுக்கு செய்யும் மிகப்பெரும் அநீதியாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுவது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால், உயர் அதிகாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட சதொச பொறுப்பாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், ஏதாவது அத்தியாவசிய பொருள்கள் குறைவாக இருப்பின் தன்னைத் தொடர்பு கொள்ளுமாறும் அமைச்சர்கள் மூலம் அவற்றை நிவர்த்தி செய்து தருவதற்கு, தான் தயாராக இருப்பதாகவும் சதொச நிலையங்களின் பொறுப்பாளர்களிடம் தெரிவித்துக் கொள்வதாகவும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்முனையில்

## 7 நாள்களுக்கு மின்சாரம் துண்டிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில், அவசர திருத்த வேலை காரணமாக, காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரை மின் துண்டிக்கப்படவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, நாளை மறுதினம் (09), நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் மின் தடைப்படும்.

வெள்ளிக்கிழமை (10), சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட மல்கம்பிட்டி வீதி,புளக் கிழக்கு மலையடிக்கிராமம், கல்லரிச்சல் ஆகிய பகுதிகளில் மின் தடைப்படும்.

திங்கட்கிழமை (13), கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட அம்மன் கோவில், உடையார் வீதி, வி.வி வீதி, இஸ்லாமாவாத் வீட்டுத் திட்டம், பாலமுனை, சின்னப்பாலமுனை, அட்டாளைச்சேனை, தரவைக் கோவில், கடற்கரைப்பள்ளி, கடற்கரை ஆகிய பகுதிகளில் மின் தடைப்படும்.

செவ்வாய்க்கிழமை (14), நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட சின்னப்பாலமுனை, கோணாவத்தை, உடங்கா, அம்பாறை வீதி, ஹிலால் புரம் ஆகிய பகுதிகளில் மின் தடைப்படும்.

புதன்கிழமை (15), சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட மாவடிப்பள்ளி, வைத்தியசாலை ஆகிய பகுதிகளில் மின் தடைப்படும்.

வெள்ளிக்கிழமை (17), கல்முனை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட மணல்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மின் தடைப்படும்.

சனிக்கிழமை (18), நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட ஒலுவில் கிராமம், அல் அர்சாத் பாடசாலை பகுதி, மாவடிக் கிராமம் ஆகிய பகுதிகளில் மின் தடை அமலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.



## தோணிகளுக்குள் இருந்த கசிப்பு சிக்கியது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

ஊரடங்கு அமலில் உள்ள நிலையில், விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு, முறக்கொட்டான்சேனை வாவியினுள் தோணிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 70,000 மில்லி லீற்றர் கசிப்பு, மீட்கப்பட்டுள்ளது. இதன் போது, சந்தேகசபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரையின் பேரில், நேற்று (07) அதிகாலை 1.30 மணியளவில், மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே, குறித்த கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள், ஏறாவூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னக் கதிர்காமத்தின்

## மகோற்சவம் இம்முறை இல்லை

■ ரவ்பீக் பாயிஸ், தீஷான் அஹமட்

சின்னக் கதிர்காமம் என்று அழைக்கப்படும் திருகோணமலை வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம், இம்முறை நடைபெறாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று (08) மகோற்சவம் இடம்பெறவிருந்த நிலையில், கொரோனா தொற்று நிலைமை காரணமாக, இவ்வருட மகோற்சவம் நடைபெறமாட்டாதென, கோவில் நிர்வாகம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.





## களஞ்சியசாலைகளுக்கு சீல்

■ எப்.முபாரக்

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 45,000 தொன் நெல் மூடைகளை பதுக்கி வைத்திருந்த களஞ்சியசாலைகளுக்கு, நேற்று (07) சீல் வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளால், நேற்று (07) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, மூன்று நெல் களஞ்சியசாலைகளில் 45000 தொன் நெல்மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து, இந்த மூன்று நெல் களஞ்சியசாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதாக, நுகர்வோர் அதிகார சபையின் திருகோணமலை பணிப்பாளர் கே.டி வசந்தன் தெரிவித்தார்.

பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

வாக்களித்த மக்களை

# கைகழுவும் வேலுகுமார் எம்.பி

## கணபதி கனகராஜ் குற்றச்சாட்டு

■ எஸ்.சதீஸ்

பெருந்தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலிருந்து மலையக மக்களுக்கும் மலையக மண்ணுக்கும் காவலராக இருந்து வருகின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸை, கொச்சைப்படுத்த மலையகத்தின் வரலாறு தெரியாத கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமாருக்கு அருகதை கிடையாது என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற நாற்காலிகளும் பிடிப்பதற்காக, அரசியலுக்கு வந்த அமைப்பல்ல என்பது திடீர் அரசியல்வாதிகளுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட காணிகளை



தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதையோ, அல்லது தொழிலாளர்களை புறந்தள்ளிவிட்டு காணிகளை கைப்பற்றும் முயற்சியை எவர் மேற்கொண்டாலும் அதை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்றுமே ஏற்றுக்கொண்டது கிடையாது.

இவ்வாறான முறையற்ற முயற்சிகளை தடுத்து நிறுத்துவதற்கு ஆளும் கட்சியிலா அல்லது எதிர்க்கட்சியிலா இருக்கிறோம் என்பது முக்கியமல்ல. நாம் மலையக சமூகத்தின் இருப்பைக் காக்கின்ற தார்மீக பொறுப்பை ஏற்று இருக்கிறோம். அதற்காக எந்தச் சூழ்நிலையிலும் எவரையும் எதிர்ப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பின் நின்றது கிடையாது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசோ அல்லது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானோ தரகுப் பணத்திற்காக தோட்டத்தொழிலாளர்களை காட்டிக்கொடுக்கும் பரம்பரையைச் சார்ந்தவர்கள் அல்ல.

அதேபோல நாகஸ்தன்ன தோட்ட காணி விடயம் தொடர்பான குற்றச்சாட்டை அதற்குப் பொறுப்பான அரசு நிறுவனம் எழுத்து மூலமாக மறுத்திருக்கிறது.

ஒருவேளை வேலுகுமார் குற்றம் சாட்டுவது போல அரசாங்கத்தால் திரைமறைவில் அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு வேலுகுமாருக்கு இருக்கிறது.

கண்டி மாவட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர் சமூகத்தால் தமது பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டவர் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் என்பதை அவர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் கண்டி மாவட்ட தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப் படுவதை பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தடுத்து நிறுத்தாவிட்டால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அவருக்கு எதிரான மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கும் எனவும் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.



தேயிலைச் செடிகளுக்கு அடியில்

# மாணிக்கக்கல் தேடியவர்கள் கைதாகி விடுதலை

■ கே. சுந்தரலிங்கம்,எஸ்.கணேசன்

நோர்வூட், சென் ஜோன் டிலரி பகுதியில், சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து, மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேயிலை செடிகளுக்கு அடியில் சுரங்கம் அமைத்து, மாணிக்கக்கல் அகழ்வில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே, குறித்த சுற்றி வளைப்பு

> **“ தேயிலை செடிகளுக்கு அடியில் சுரங்கம் அமைத்து, மாணிக்கக்கல் அகழ்வில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே, குறித்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது**

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

# வத்துகாமத்தில் இரத்ததானம்

■ மொஹமட் ஆஸிக்

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவையொட்டி, நேற்று முன்தினம் (6) கண்டி, வத்துகாமம் நகர மண்டபத்தில் இரத்ததானம் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பாத்ததும்பறை பகுதியின் பிரதான அமைப்பாளரும் வத்துகாமம் நகர சபையின் உப தவிசாளருமான பிரியந்த புஸ்பகுமாரவால் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன், இதில் ஏராளனமானவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.





# உலருணவுப்பொருள்கள் கையளிப்பு..

தனிமைப்படுத்தல் ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள பூண்டுலோயா பகுதியில் உள்ள 50 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொருள்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் நிதியொதுக்கீட்டில், கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் இராமையா பாரதிராஜாவால் வழங்கிவைக்கப்பட்டன.

(படங்கள்: பி. கேதீஸ்)



# யானைகளுக்கு ஆடைகள் வழங்கி வைப்பு

■ சிவாணி ஸ்ரீ

வரலாற்று பிரசித்திப்பெற்ற சப்ரகமுவ மஹா சமன் தேவாலயத்தின் பெரஹெரவில் கலந்துகொள்ளும் யானைகளுக்கு, சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் ஆடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி யானைகளுக்கான ஆடைகள் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவால் நேற்று முன்தினம் (6) மாகாண சபை கட்டடத்தொகுதியில் வைத்து, சமன் தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே மிகார ஜயசுந்தரவிடம் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த ஆடைகள்,

> **“ சப்ரகமுவ மஹா சமன் தேவாலயத்தின் பெரஹெரவில் கலந்துகொள்ளும் யானைகளுக்கு, கண்டி பெரஹெரவில் கலந்துகொள்ளும் யானைகளுக்காக வடிவமைக்கப்படும், கண்டியில் உள்ள புனித ஆடைகள் தயாரிக்கும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது**

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை பெரஹெரவில் கலந்துகொள்ளும் யானைகளுக்காக வடிவமைக்கப்படும், கண்டியில் உள்ள புனித ஆடைகள் தயாரிக்கும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மத்திய மாகாணத்தில் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான

# இருபது அம்சத் திட்டம் தயாரிப்பு

■ மொஹமட் ஆஸிக்

தற்போதைய சவாலான சூழ்நிலையில், கல்வி நடவடிக்கைகளைத் தொடரவும் புலமைப்பரிசில் பரீட்சை, உயர்தரப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்வது போன்ற கல்விஅபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக, 20 அம்சத்திட்டம் மத்திய மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

கல்வியில் தரமான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட மேற்படி புதிய ‘TEAM 20’ கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை செயற்படுத்துவது குறித்து, மத்திய மாகாண பிரதான செயலாளர் காமினி ராஜரத்ன தலைமையில் கண்டி, குருதெனியாவில் உள்ள கல்வி அபிவிருத்தி மத்திய நிலையத்தில் சிறப்பு கலந்துரையாடல் நடைபெற்றது. மத்திய மாகாண மாணவர்களது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வது, புலமைப்பரிசில் மற்றும் உயர்தர பரீட்சைகளை எதிர்நோக்கியுள்ள மாணவர்களைத் தயார் செய்வது, பரீட்சை முடிவுகளை மேம்படுத்துவது முதலான நோக்கங்களின் அடிப்படையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



> **“ மத்திய மாகாண மாணவர்களது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வது, புலமைப்பரிசில் மற்றும் உயர்தர பரீட்சைகளை எதிர்நோக்கியுள்ள மாணவர்களைத் தயார் செய்வது முதலான நோக்கங்களின் அடிப்படையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது**

அத்துடன் ஏனைய அனைத்து தரங்களுக்கும் அனைத்து பாடங்களுக்கும் புதிய விடயங்கள் கல்வி தொகுதிகள் போன்றவற்றை வடிவமைத்து கல்வியின் தரம் மேம்படுத்தப்பட உள்ளது.

வலய கல்வி அலுவலகங்கள், பிரதேச கல்வி அலுவலகங்கள் மூலம் திட்டங்களை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள், பெற்றோர்களின் ஒத்துழைப்பு என்பன மூலம் பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளவும் கலந்துரையாடப்பட்டது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறி

# மொனராகலைக்கு படையெடுக்கும் வாகனங்கள்

■ சுமணசிறி குணதிலக

கொரோனா தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், அச்சட்டத்தை மீறி, மொனராகலைக்கு அதிகளவானோர் வாகனங்கள் மூலம் வருகை தருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மொனராகலை மாவடத்தில் 16,000 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 115 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், மொனராகலை நகருக்குள் வருகை தரும் வாகனங்கள், மக்களால் தொற்று பரவுவது அதிகரித்துள்ளதென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.





# பால் கேணில் கசிப்பு தயாரித்த மூவர் கைது

■ எஸ்.சதீஸ், கே.சுந்தரலிங்கம்

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தினை மீறி, கசிப்பு மற்றும் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்பட தோட்டத்தில் உள்ள, மாட்டு கொட்டகை ஒன்றில் மிகவும் சூட்சுமான முறையில், நடத்தி வரப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையத்தை நோர்வூட் பொலிஸார்

> **“ எல்பட தோட்டத்தில் உள்ள, மாட்டு கொட்டகையில் சூட்சுமான முறையில், நடத்தி வரப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையத்தை நோர்வூட் பொலிஸார் நேற்று முன்தினம் (06) சுற்றிவளைத்தனர்**

நேற்று முன்தினம் (06) சுற்றிவளைத்தனர்.

இதன்போது, சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர், அடுப்பு, பால் சேகரிப்பு கேண், 20,000 மில்லிலீற்றர் கோடா, 3,000 மில்லிலீற்றர் சட்டவிரோத மதுபானம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களையும் உபகரணங்களையும் எதிர்வரும் 13ஆம் திகதி ஹட்டன் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த உள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

# துறைமுகத்துடன் முடிச்சுப் போட்டு தடுப்பூசியைக் கழுவலாமா?

தடுப்பூசியை செலுத்துவதற்கே அஞ்சியிருந்த மக்கள், வரிசையாகச் சென்று, விறுவிறுப்பாகச் செலுத்திக் கொள்கின்றனர். இன்னும் சிலர், வேண்டாத பீதியால் வீடுகளுக்குள்ளே முடங்கிக்கிடக்கின்றனர். தடுப்பூசி வகைகளையும் சிலர் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

நாட்டுக்கு பல வகையான தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டன; அந்தந்த நாடுகளைச் சேர்ந்த தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்களுக்கு அந்தந்த நாடுகளில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்பட்டு, இரண்டு முறையும் செலுத்திக்கொள்ளப்பட்டன.

ஆனால், ஒரிரு வகையான தடுப்பூசிகளின் பெயர்களை மட்டுமே மனப்பாடம் செய்துவைத்துக்கொண்ட சிலர், அந்தவகை தடுப்பூசியையே ஏற்றிக்கொள்வேன்; அதில்தான் நோயெதிர்ப்பு சக்தி ஆகக்கூடுதலாக இருக்கிறது என்றெல்லாம் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் கேட்கும் அந்த வகையைச் சேர்ந்த தடுப்பூசிகள், இலங்கைக்கு இறக்குமதி செய்யாவிடின், அந்தந்த நாடுகளுக்குச் சென்று அவர்களால் பெற்றுக்கொள்ள முடியுமா? இயலாது. அப்படியாயின், ஒருவகையான தடுப்பூசியை மட்டுமே தேடிக்கொண்டு இருப்பது, ஏனையோருக்கும் கொரோனா தொற்றை பரப்பும் காவியாக மாறுவதற்கு ஒப்பானதாகும்.

அதேபோல, 19 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசிகளை செலுத்துதல் துரிதப்படுத்தப்பட்டுள்ளது ஹம்பாந்தோட்டைக்கு ஏற்றப்படும் ஃபைசர் தடுப்பூசி தொடர்பில், பல்வேறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அதற்குப் பதிலளித்துள்ள வைத்தியர் பிரசன்ன குணசேன, “துறைமுகத்துக்கு அருகில் இருப்பதால், ஃபைசர் வழங்கினோம்” என, சிறுபிள்ளைத்தனமாக பதிலளித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்காலத்தில் சுகாதாரத்துறையின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்தவர்கள், முப்படையினர் ஆகக்கூடுதலான பொறுப்புடன் செயற்படுகின்றனர் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், துறைமுகத்தையும் தடுப்பூசியையும் முடிச்சுப்போட்ட வைத்தியரின் பதில்தான் பொறுப்பற்றதாக உள்ளது.

தொழில்தர்மத்தைக் காக்கவேண்டும். துறைமுகம் இருந்தால்தான் ஃபைசர் தடுப்பூசி கிடைக்குமெனில், நாட்டுக்குள்ளிருக்கும் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஃபைசர் கிடைக்கவே கிடைக்காது. அதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட, சகல வகையான தடுப்பூசிகளும் வான்வழியாகவே கொண்டுவரப்பட்டன. அவ்வாறிருக்கையில், எதைக் கழுவுவதற்காக, இந்த வைத்தியர் துறைமுகத்துடன் தடுப்பூசியை முடிச்சுப் போட்டுள்ளார்?

நோயை வைத்தியரிடம் மறைக்கவே கூடாதென முன்னோர்கள் சொல்லிவைத்துள்ளனர். ஆனால், வைத்தியரே இவ்வாறு பொய்யைக் கூறி, முழுப் பூசணிக்காயையும் சோற்றுக்குள் மறைத்துவைக்கும் செயற்பாட்டை செய்துள்ளார்.

வைத்தியர்களிலும் தொழில் தர்மம் இன்றி வாழ்பவர்கள் இருக்கின்றனர். தொழில் தர்மத்தை எப்போதும் பாதுகாக்கவேண்டும். அதேபோல, தடுப்பூசியை விநியோகிக்கும் போதும் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.

கண்டி மாவட்டத்தில் ஒரிரு பிரிவுகளுக்கு செலுத்தப்பட்ட ரஷ்யாவின் தயாரிப்பான ஸ்புட்னிக் வீ, தடுப்பூசி இரண்டாவது தடவையாக கிடைக்கவில்லை. காலம் கடந்துவிட்டால், செலுத்துவதில் பிரயோசனமே இருக்காது என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மயக்கம் தரும் அவசரகாலச் சட்டம்



எம்.எஸ்.எம். ஐயூப்

அத்தியாவசிப் பொருட்களின் சீரான விநியோகத்தை நோக்கமாகக் கூறி, ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி, அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பிறப்பித்தார். ஆனால், அதன் முக்கியத்துவத்தையோ பாரதூரத் தன்மையையோ, தமிழ்ப் பத்திரிகைகள் தவிர்ந்த இந்நாட்டின் ஏனைய ஊடகங்கள் காணவில்லைப் போலும்!

சில தமிழ்ப் பத்திரிகைகள், அச்செய்தியை முன்பக்கத் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்தன. ஆனால், சிங்களம், ஆங்கிலம் மொழி பத்திரிகைகள், முன்பக்கச் செய்தியாகப் பிரசுரித்தாலும், பிரதான செய்தியாகப் பிரசுரிக்கவில்லை.

வழமையாக இலங்கையில், பாதுகாப்புப் பிரச்சினைகள் எழுந்த போதோ அல்லது, இனக்கலவரங்கள், வேலைநிறுத்தங்கள் போன்ற தொழிலாளர் போராட்டங்களின் போதோதான் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, அவசரகாலச் சட்டத்தோடு பாதுகாப்புக் கெடுபிடிகள் ஏற்படலாம் என்ற அடிப்படையிலும், தமது அரசியல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, அச்சட்டத்தை அரசாங்கம் பாவிக்கும் என்பதாலும், எதிர்க்கட்சிகள் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வந்துள்ளன.

ஆனால், 30 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்துக்கு, அவ்வாறான கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்படவில்லை. அவசரகாலச் சட்டத்தை எப்போதும் கடுமையாக எதிர்க்கும் மக்கள் விடுதலை முன்னணி, இம்முறை அதை நேரடியாக எதிர்த்து, எதையும் செய்யவில்லை.

ஜனநாயகம், நல்லாட்சி ஆகிய விடயங்களின் போது, எப்போதும் குரல் எழுப்பும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் அவசரகால சட்டம் குறுகிய காலத்துக்கே அமலில் இருக்க வேண்டும் என்று, ஓர் அறிக்கை மூலம் குறிப்பிட்டு, காரம் குறைந்த எதிர்ப்பையே தெரிவித்திருந்தது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஓர் அறிக்கையை வெளியிட்டு இருந்தது. அரசாங்கம், பொதுமக்களின் உரிமைகளைப் பறிக்கும் உள்நோக்கத்துடனேயே அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளதாக, அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தில், தடைகள் ஏற்பட்டு இருந்தால், அதற்கு அரசாங்கத்தின் நிர்வாகத் திறனின்மையும் முகாமைத்துவ முறைகேடுகளுமே காரணமாகும். உலக சுகாதார ஸ்தாபனம், கொவிட்-19 நோயை உலகளாவிய தொற்று என்று பிரகடனப்படுத்தி, 18 மாதங்கள் கடந்திருந்தும் நாட்டில் சுகாதார அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்றும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பே, இந்த அவசரகாலச் சட்டத்தை முதன் முதலாக எதிர்த்தது. அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் பிறப்பித்துள்ளது என்ற செய்தியோடு, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், அது தொடர்பாகத் தெரிவித்த கருத்தும், தமிழ்ப் பத்திரிகைளில் வெளியாகி இருந்தது. பொது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்காத நிலைமையில், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவசரகாலச் சட்டத்தின் மூலம், சட்டமாக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளதாகவும் அதன் மூலம், ஜனாதிபதி ஆட்சி நாட்டில் ஏற்பட்டுள்ளதாகவும் கூறும் சுமந்திரன் எம்.பி, கொவிட்-19 நோயின் தாக்கத்தை எதிர்கொள்வதற்காக, சுகாதார அவசரகால நிலைமையைப் பிறப்பிக்கும் வகையில், தனி நபர் பிரேரணையாக ஒரு சட்டமூலத்தை, நாடாளுமன்றத்தில் தாம் சமர்ப்பித்ததாகவும் அரசாங்கம், அதை ஏற்றுக் கொண்ட போதிலும், நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டில் அண்மைக் காலமாக மிக வேகமாக அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்து வருகிறது. வர்த்தகர்கள், பொருட்களைப் பதுக்கி, விலையை உயர்த்துவதாகவும் அரசாங்கம் அதற்குத் துணை போவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. இந்தப் பின்னணியிலேயே, அத்தியாவசியப் பொருட்களின் சீரான விநியோகத்துக்காகவென அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி பிறப்பித்தார்.

அவசரகாலச் சட்டத்தை பூரணப்படுத்துவதற்காக, பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களையும் 1979 ஆண்டு அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் ஒரு பிரகடனத்தையும் ஜனாதிபதி வெளியிட்டு இருக்கிறார். ‘பாவனையாளர்களுக்கும் மக்களின் நலனுக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் சந்தை முறைகேடுகளை ஏற்படுத்தும் வகையில், அரிசி, சீனி உள்ளிட்ட உணவுத் தொகைகளைப் பதுக்கியும் விநியோகத்தை தடுத்தும், மிகக் கூடுதலான விலையை அறவிடுவதைத்த தடுப்பதே’ முதலாவது வர்த்தமானியின் நோக்கம் என, அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டம் எவ்வாறு செயற்படும் என்பது, அதில் விவரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள மற்றைய வர்த்தமானி மூலம், அத்தியாவசியப் பொருட்களின் சீரான விநியோகத்துக்காக மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹல்ல அத்தியாவசிய சேவைகள் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் மற்றைய பிரகடனத்தின் மூலம், எந்தெந்தச் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகின்றன என்ற விவரம் வழங்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள், எரிபொருள் விநியோகம், ரயில், அரச பஸ் சேவைகள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர்கள், சமூர்த்தி அலுவலர்கள், விவசாய அபிவிருத்தி அதிகாரிகள், அரச வங்கிகள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், சதோச, கூட்டுறவுச் சங்கங்கள், நெல் சந்தைபடுத்தும் சபை, மாகாண சபைகள், இலங்கை சீனிக் கம்பனி ஆகியன அச் சேவைகளாகும். அதாவது, அமைச்சு அலுவலகங்கள் தவிர்ந்த அரச நிர்வாகத்துக்கான சகல நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளாகின்றன.

சுருக்கமாகக் கூறின், மொத்த அரச இயந்திரமே அத்தியாவசிய சேவைகளாகும். வேலை நிறுத்தங்கள் உள்ளிட்ட சகல தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்துக்கு தடையாக அமையக்கூடிய எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடும் எவரையும், உடனடியாகப் பதவிநீக்கம் செய்ய இதன் மூலம் அரசாங்கத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அத்தியாவசியப் பொருட்களின் சீரான விநியோகத்துக்குத் தடையாகும் வகையில், பொருட்களைப் பதுக்கும் களஞ்சியசாலைகளை அரசுடமையாக்கவும் கைப்பற்றப்படும் களஞ்சியசாலைகள், வாகனங்களில் இருந்த பொருட்களைக் கையகப்படுத்தவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இதனால் பொருட்களைப் பதுக்கும் மேசடிக்கார வர்த்தகர்களுக்கு எந்தவித நட்டமும் ஏற்படுவதில்லை. ஏனெனில், அந்தப் பொருட்களை அரசாங்கம் கைப்பற்றினாலும் பறிமுதல் செய்யாது. மாறாக, அப்பொருட்களுக்கு சுங்கத் திணைக்களம் விதித்த விலையைக் கருத்திற் கொண்டு, அப் பொருட்களைக் கையகப்படுத்தி, நியாயமான விலைக்கு மக்களிடையே விநியோகிக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு விலையைக் கருத்திற்கொண்டு, ஒரு பொருளை அரசு பறிமுதல் செய்வதாக இருந்தால், அது விலை கொடுத்து வாங்கப்படும் என்பதே அர்த்தமாகும்.

அதன் பிரகாரமே, அண்மையில் ஊடகங்கள் அம்பலப்படுத்திய கம்பஹா மாவட்டத்தில் அமைந்திருந்த அனுமதியற்ற களஞ்சியசாலைகளில் இருந்து கைப்பற்றப்பட்ட பல ஆயிரம் மெற்றிக் தொன் சீனியை, அரச நிறுவனங்கள் கொள்வனவு செய்தன. அதுவும், இந்தப் பொருட்களை வர்த்தகர்கள் பதுக்குவதற்கு முன்னர், அவற்றை விற்க வேண்டும் என, 2020 நவம்பர் மாதம் அரசாங்கம் விதித்த ஒரு கிலோகிராம் 85 ரூபாய் என்ற விலைக்கன்றி, ஒரு கிலோகிராம் 115 ரூபாய்க்கே, அரச நிறுவனங்கள் அந்தச் சீனியைக் கொள்வனவு செய்தன. அதாவது, பதுக்கலுக்குத் தண்டனை வழங்குவதற்குப் பதிலாக, கிலோகிராமுவுக்கு 30 ரூபாய் மேலதிகமாகக் கொடுத்தே அரச நிறுவனங்கள் அந்த சீனியை கொள்வனவு செய்துள்ளன.


உண்மையிலேயே, இந்த அவசரகாலச் சட்டம் இல்லாவிட்டாலும், பதுக்கப்பட்ட பொருட்களை கண்டுபிடிக்கவும் அப்பொருட்களை அரசுடமையாக்கவும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்கு அதிகாரம் இருக்கிறது.

இந்த அவசரகாலச் சட்டத்தால், சில பாதிப்புகளில் இருந்து வர்த்தகர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் சாதாரண சட்டத்தின் கீழ், பதுக்கப்பட்ட பொருட்களை அரசாங்கம் நட்டஈடோ விலையோ கொடுக்காமல், பறிமுதல் செய்யலாம். ஆனால், இந்த அவசரகாலச் சட்டம், அவற்றை விலை கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டும் என்கிறது.

2020 நவம்பர் மாதம் அரசாங்கம், ஒரு கிலோகிராம் சீனிக்கு 85 ரூபாய் என்ற கட்டுப்பாட்டு விலையை விதித்து, வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டது. ஆனால், வர்த்தகர்கள் அதைத் தூசுக்கும் மதிக்காமல், சீனியை ஒரு கிலோ 120 ரூபாய், 130 ரூபாய் என விற்றனர். அப்போதே, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தலையிட்டு, இதைத் தடுத்து இருக்கலாம். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை. எதையும் செய்ய முடியாது என நுகர்வோர் பாதுகாப்புக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன கூறினார்.

பின்னர், சீனி விலை கிலோகிராமுக்கு 220 ரூபாய்வரை ஏறி, சீனி பதுக்கப்பட்ட களஞ்சியசாலைகளைத் தேடி, ஊடகங்கள் அம்பலப்படுத்தவே அரசாங்கம் இந்த அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தது.

இப்போது, கைப்பற்றப்பட்ட சீனி அரசாங்கத்தின் சதோச, கூட்டுறவு கடைகளில் கிலோகிராம் 125 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தாம் சீனி விலையை 220 ரூபாயிலிருந்து 125 ரூபாய்க்குக் குறைத்துள்ளோம் என இப்போது அமைச்சர்கள் கூறுகின்றனர். ஆனால், இது 85 ரூபாய்க்கு விற்க வேண்டும் என்று அரசாங்கமே விலை நிர்ணயித்த சீனியாகும்.



## வாழ்வியல் தரிசனம்

பெண்கள் கட்டாயமாகத் தற்பாதுகாப்புக் கலைகளைக் கற்றேயாக வேண்டும். பண்டைக் காலத்தில் இருந்தே, நமது வீரப் பெண்மணிகள் எதிரிகளுடன் போராடும் வித்தைகளைக் கற்றிருந்தனர். வாள் வீச்சு, சிலம்பம், குதிரையேற்றம் போன்ற போரியல் பயிற்சிகளை, ஆண்களுக்கு நிகராகக் கற்றுக் கொண்டனர். இதனால் அவர்களின் இரத்தத்தில், வீரம் செறிந்திருந்தது.

இன்று, பெண்களை மதிக்காது அவமானப்படுத்தும் கயவர்கள் கூட்டம் அதிகமாகிவிட்டது. பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை; அதனால், பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைகளை பெண்கள் எதிர்கொண்டே ஆகவேண்டும். பெண்கள் தமக்கான அநீதிகளுக்கு எதிராகத் துணிச்சலுடன் போராட வேண்டும். தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொண்டால், எவருக்கும், எந்நேரத்திலும் பயப்பிடத் தேவையில்லை.

ஆண், பெண் பேதமின்றி, தற்பாதுகாப்புக் கலைகளை அனைவரும் கற்றுக்கொண்டால், மனவுறுதி, வீரம், தேகபலம் எல்லாமே இணைந்துவிடுகின்றன. பெண்கள் சளைத்தவர்கள் அல்ல; எதிர்கொள்பவர்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கத்திரியில் மர்ம நோயின் தாக்கம்

கிண்ணியாவில், சேதனப் பசளை மூலம் மேற்கொள்ளப்பட்ட கத்திரிச் செய்கையில், ஒரு வகையான பக்டீரியா நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதால், கத்திரிச் செடியின் இலைகள் வாடி, செத்து மடிவதால், விவசாயிகள் பாரிய பிரச்சினைகளுக்கு எதிர்நோக்கி வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பிரதேசத்தில் காக்காமுனை, சம்மாவச்சதீவு, பூவரசன்தீவு, சூரங்கல், ஆயிலியடி, மணியரசன்குளம், மஜீத் நகர் போன்ற பகுதி விவசாயிகள், இவ்வாறு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு கத்திரி, வெண்டி, மிளகாய், பஸ்ட்றா, மரவள்ளி, முருங்கை, இராசவள்ளி போன்ற பயிர்களைச் செய்கைபண்ணுகின்றனர். இவர்கள், சேதனப் பசளை மூலம் மாரி, கோடை ஆகிய இரண்டு போகங்களிலும் விவசாயத்தை மேற்கொள்கின்றனர்.

சேதனப் பசளையாக மாட்டுச் சாணம், ஆட்டெரு, கோழி சாணம், உமி, சாம்பல், தாவரங்களின் இலை போன்றவை பயன்படுத்தப்படுகின்றது. நோய்த் தாக்கம் தொடர்பாக, விவசாய போதனாசிரியர் நேரில் வந்து பார்த்து, கத்திரி மரத்தின் மாதிரிகளை ஆய்வுக்கு அனுப்பியும் நோய்க்கான மருந்து, இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

- ஏ.ஆர். எம். றிபாஸ்



புதுடெல்லி

## டெல்டாவுக்கு இந்தியா காரணமா?

# தாக்கல் செய்த மனு தள்ளுபடி

கொரோனா இரண்டாவது அலை பரவலை ஏற்படுத்தியுள்ள 'டெல்டா' வகை வைரஸுக்கு இந்தியா காரணமா என்பது குறித்து விசாரிக்க, சர்வதேச நிபுணர் குழுவை அமைக்க வேண்டும்' எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை, உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.



'அபினவ் பாரத் காங்கிரஸ்' என்ற அரசு சாரா அமைப்பின் தலைவர் பங்கஜ் பட்னிஸ், உச்ச நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்திருந்தார். அதில் அவர் கூறியுள்ளதாவது: தற்போது உலகின் பல நாடுகளில் பரவிவரும் டெல்டா வகை கொரோனா வைரஸ், மஹாராஷ்டிர மாநிலம் அமராவதியில் தான் முதலில் தென்பட்டதாக கூறப்படுகிறது. ஆனால், இது உறுதி செய்யப்படவில்லை. இந்த வகை வைரஸ் பரவலுக்கு இந்தியா காரணமா என்பது குறித்து ஆராயப்பட வேண்டும். இதற்காக சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் அடங்கிய சர்வதேச குழுவை அமைத்து விசாரிக்க, மத்திய அரசாங்கத்துக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை தள்ளுபடி செய்து , உச்ச நீதிமன்ற நீதிபதிகள் டி.ஒய். சந்திரசூட், விக்ரம் நாத், ஹீமா கோஹ்லி ஆகியோர் அமர்வில் உத்தர விட்டதாவது:

இது தொடர்பாக சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது. மேலும் கொரோனா பரவலை தடுப்பதற்கான வழிமுறைகளையே நாம் தற்போது கவனிக்க வேண்டும். வைரஸ் தோன்றியதில் சதி ஏதும் உள்ளதா என்பது குறித்து கவனிக்க வேண்டியதில்லை. விசாரணை நடத்த சர்வதேச குழுவை அமைப்பது தொடர்பாக, மத்திய அரசாங்கத்தை நீங்கள் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். என அமர்வில் உத்தரவிட்டனர்.

புதுடெல்லி

## போர் விமானங்களை சாலைகளில் தரையிறக்க முடிவு



அவசர காலங்களில் போர் விமானங்களை சாலைகளில் தரையிறக்குவதற்காக நாடு முழுவதும் 12 பாதைகளை மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்காக விமானப் படையினருடன் இணைந்து, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்த தேசிய நெடுஞ்சாலைகளை உருவாக்கி வருகிறது.

இதில் ராஜஸ்தானின் பார்மரில் 3 கி.மீ. தொலைவுக்கு உருவாக்கப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை ஒன்று தொடக்க விழாவுக்கு தயாராகி உள்ளது. இந்த சாலை இந்த வாரம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படுகிறது.

இதை மத்திய இராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்காரி ஆகியோர் நாட்டுக்கு அர்ப்பணிப்பார்க உள்ளனர். இதையொட்டி இந்த சாலையில் போர் விமானத்தை அவசரமாக தரையிறக்கி ஒத்திகை பார்க்கப்படுகிறது.

இதில் முக்கியமாக, மேற்படி அமைச்சர்கள் இருவருடனே விமானப்படை விமானம் ஒன்று இந்த சாலையில் தரையிறங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.



திருப்பத்தூர்

## விநாயகர் சிலையுடன் ஊர்வலமாகச் சென்ற

## இந்து மக்கள் கட்சியினரிடம் சிலைகள் பறிமுதல்

விநாயகர் சதுர்த்தியன்று பொது இடங்களில் சிலைகள் வைத்து வழிபாடு நடத்த வேண்டும் என வலியுறுத்தி, விநாயகர் சிலையை தலையில் சுமந்து ஊர்வலமாகச் சென்ற இந்து மக்கள் கட்சியினரிடம் இருந்து சிலைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

எதிர்வரும் 10ஆம் திகதி நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படவுள்ளது. கொரோனா தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கையாக விநாயகர் சிலைகளை பொது இடங்களில் வைத்து வழிபாடு செய்யக்கூடாது, விஜர்சன ஊர்வலம் நடத்தவும் தமிழக அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இந்நிலையில், விநாயகர் சதுர்த்தி தினத்தன்று பொது இடங்களில் அரசாங்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, விநாயகர் சதுர்த்தி திருவிழாவை நடத்த அனுமதிக்க வேண்டும். அதேபோல, விஜர்சன ஊர்வலத்தையும் நடத்தவும் அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என வலியுறுத்தி இந்து மக்கள் கட்சியின் மாநில அமைப்பாளர் செல்வம், மாவட்டத் தலைவர் ரமேஷ் ஆகியோர் விநாயகர் சிலைகளை தலையில் சுமந்தபடி திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் இருந்து ஊர்வலமாக வந்து மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்க நேற்றுமுன்தினம் காலை வந்தனர்.

இதையறிந்த திருப்பத்தூர் நகர பொலிஸார் அவர்களை ஆட்சியர் அலுவலகம் அருகே தடுத்து நிறுத்தி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அப்போது, பாதுகாப்பு கருதி சிலைகளை எடுத்துச்செல்ல அனுமதியில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சென்னை

## தமிழ்நாட்டில்

## பத்திரிகையாளர்களுக்கு நலத் திட்டங்கள்

பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும் என சட்டசபையில் தமிழ்நாடு செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் மானியக்கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இதில், ஒவ்வொரு நாளும் பல்வேறு புதிய அறிவிப்புகளை தமிழக அரசாங்கம் வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் செய்தித்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் அமைச்சர் சாமிநாதன் தெரிவித்ததாவது:

பணிக்காலத்தில் இறக்கும் பத்திரிகையாளர்களுக்கான குடும்ப நிதி உதவி ரூ.3 இலட்சத்தில் இருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்படும். இளம் பத்திரிகையாளர்கள் உயர்கல்வி படிக்க அரசாங்கம் நிதியுதவி வழங்கப்படும். பத்திரிகையாளர்களுக்கு நல வாரியம் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

சென்னை

## கையில் குச்சியுடன், நல்ல பாம்பை விரட்டிய பெண்



வீட்டிற்குள் வந்த நல்லப்பாம்பை அடிக்காமல் அன்பாக பெண் ஒருவர் வெளியே அனுப்பும் வீடியோ வைரலாகி வருகிறது.

ஒரு பெண்ணின் துணிச்சலான செயற்பாட்டை பாராட்டாமல் இருக்கவே முடியாது.

நேற்றுமுன்தினம் வீட்டு கேட்டை தாண்டி சிறிய நல்லப்பாம்பு ஒன்று வந்துவிட்டது. பெண் ஒருவர் கையில் குச்சியுடன், "எல்லாரும் பயப்படுறாங்க போடி தங்கம் போடி. உனக்கு பாலும் முட்டையும் உன் புற்றில் வந்து நான் ஊத்துறேன். போடி தங்கம் என குச்சியால் அந்த பாம்பை மெதுவாக வெளியே செல்ல வைக்கிறார். சிறிய பாம்பு படம் எடுத்தப்படியே அவர் சொல்வதை கேட்டு வெளியே செல்கிறது. அப்போது இரும்பு கேட்டை திறந்த அந்த பெண் "நீ இப்போது போ, நான் உனக்கு சத்தியமாக பால் ஊற்றுகிறேன். சத்தியமா வரேன், போய்ட்டு வா. இனி இந்த பக்கமே நீ வரக் கூடாது" என்கிறார்.

அந்த பாம்பு அவரை பார்த்தபடியே பின்புறமாக மெல்ல ஊர்ந்து செல்கிறது. பின்னர் சிறிது தூரம் கழித்து பாம்பு முன்னோக்கி சென்றுவிடுகிறது.

புதுடெல்லி

## சந்திராயன்-2 விண்கலம்;

## நிலவை 9,000 முறை வெற்றிவலம்



சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் நிலவை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட சந்திராயன் -2 விண்கலம் நிலவை 9,000 முறை வெற்றிகரமாகச் வட்டமிட்டு ஆய்வு செய்துள்ளதாகவும் சந்திராயன் -2 தொடர்ந்து சிறப்பாக செயற்பட்டு வருவதாகவும் இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இஸ்ரோ சார்பில் நிலவு Lunar Science எனப்படும் நிலவு குறித்த ஆய்வுகளை விளக்கும் வகையிலான இரண்டு நாள் கருத்தரங்கு நேற்று ஆரம்பமானது.

நிலவின் சுற்றுப்பாதையைச் சுற்றி வரும் சந்திரயான் -2 விண்கலம் தனது செயற்பாடுகளைத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவுகூரும் வகையில் இந்தப் பட்டறை நடத்தப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய இஸ்ரோ தலைவர் சிவன், சந்திரயான் -2 திட்டத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் தரவுகள் அடுத்தகட்ட ஆய்வுகளுக்குப் பெரியளவில் பயன்படும் வகையில் உள்ளது.

இந்தத் தரவுகளை நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை, கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தும் வகையில் பொதுவெளியில் நாங்கள் பகிர்ந்துள்ளோம் என்றார்.



பா.நிரோஸ்
ddnirosh@gmail.com



## '14ஆவது திருத்தம்

# 'அரசமைப்புக்கு உட்பட்டே கொண்டுவரப்பட்டது'

அரசியலமைப்புக்கு அமைவாகவே, அரசியலமைப்பின் 14ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி, அது தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கத் தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துகொண்டு சிறப்புரிமை பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், 14ஆவது திருத்தம் தவறாக அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவித்து, எனக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது தவறானது. 14ஆவது திருத்தம் தயாரிக்கும்போது அந்த அமைச்சரவை குழுவில் நானும் இருந்தேன். அது தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் சபைக்கு சமர்ப்பிக்கின்றேன். இந்த விடயத்தைத் தெளிவாக விளங்கி, முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் தெரிவித்த ரணில், இல்லாவிட்டால் எதிர்காலத்திலும் வேறு சட்டங்கள் தொடர்பாகவும் சந்தேகம் எழுப்பி பாராளுமன்றத்தின் கௌரவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடும் எனவும் தெரிவித்தார்.

எனவே, இது தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்ட ரணில். சில ஊடகங்களும் இதற்குத் துணை நிற்பதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

## கடன் இல்லா நாட்டை கட்டியெழுப்புவோம்



நாடு பாரதூரமான நிதி நெருக்கடியில் உள்ளது. அரச வருமானத்தைவிட செலவீனங்கள் அதிகமாகவுள்ளன. கடன் இல்லாத நாட்டை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம் எனத் தெரிவித்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வருட இறுதிக்குள் வீழ்ச்சிடையந்துள்ள அந்நியசெலாவணி ஸ்தீரமாக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துகொண்டு, அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கை பிணையங்கள், பரிவர்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஏனைய உலக நாடுகள் போல, இலங்கையின் பொருளாதாரமும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அந்நிய செலாவணி தொடர்பிலும் நாடு நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. தேசிய ரீதியிலான நிதி நெருக்கடிக்கும் திறைசேரி முகங்கொடுத்துள்ளது.

இவ்வாறான பாரிய பிரச்சினைகளுக்கு நாடு முகங்கொடுத்து வருகிற நிலையில், எதிர்க்கட்சி பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். தனியாக இப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணவோ, அரசியல் இலாபத்தைத் தேடவோ அரசாங்கம் முயற்சிக்காது எனவும் தெரிவித்தார்.

அரசுக்கு கிடைக்க வேண்டிய 1,500 முதல் 1,600 வரையான பில்லியன் வருமானம், கொரோனா வைரஸ் காரணமாக குறைவடைந்துள்ளது. எதிர்பார்க்கப்பட்டதை விடவும் வருமானம் குறைவடைந்துள்ளதாகவும் கூறினார்.

## குற்றவாளிகளை பாதுகாக்க மாட்டோம்



இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுட்ட எந்தவொரு குற்றவாளிகளையும் விளையாட்டுத்துறை அமைச்சர் என்றவகையில் தான் ஒருபோதும் பாதுகாக்கப்போவதில்லை என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துக்கொண்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவினால் எழுப்பப்பட்ட வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் கோப் குழுவும் கடந்தக் காலங்களில் அவதானம் செலுத்தியிருந்தது. இதுத் தொடர்பில் கோப் குழுவிடமிருந்து கிடைக்கப்பெறும் புதிய அறிக்கைக்குப் பின்னர் நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் உலக அளவில் கவனம் செலுத்தப்படும் என்பதால், இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெறும் விசாரணைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களை விளையாட்டுத்துறை அமைச்சர் என்றவகையில் நானோ, எங்களது அரசாங்கமோ பாதுகாக்கப்போவதில்லை. அவர்களுக்கு எதிராக சட்டநடிவக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## 'கடன் இல்லாத நாடே எமது நோக்கம்'



நாடு பாரதூரமான நிதி நெருக்கடியில் உள்ளது. அரச வருமானத்தைவிட செலவீனங்கள் அதிகமாகவுள்ளதாகவும், கடன் இல்லாத நாட்டை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம் எனத் தெரிவித்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வருட இறுதிக்குள் வீழ்ச்சிடையந்துள்ள அந்நியசெலாவணி ஸ்தீரமாக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (07) அமர்வில் கலந்துக்கொண்டு, அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கொரோனா வைரஸ் தொற்றால் ஏனைய உலக நாடுகள் போல இலங்கையின் பொருளாதாரமும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அந்நிய செலாவணியும் தொடர்பில் நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துள்ளது. தேசிய ரீதியிலான நிதி நெருக்கடிக்கும் திறைசேரி முகங்கொடுத்துள்ளது எனவும் தெரிவித்தார்.

இவ்வாறானப் பாரியப் பிரச்சினைகளுக்கு நாடு முகங்கொடுத்து வருகிற நிலையில், எதிர்க்கட்சி பொறுப்புடன் நடந்துக்கொள்ள வேண்டும். தனியாக இப்பிரச்சினை தீர்வை காணவோ அல்லது அரசியல் இலாபத்தை தேடவோ அரசாங்கம் முயற்சிக்காது எனவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக அரசுக்கு கிடைக்க வேண்டிய 1500 முதல் 1600 வரையான பில்லியன் வருமானம் குறைவடைந்துள்ளது. எதிர்பார்க்கப்பட்டதை விடவும் வருமானம் குறைவடைந்துள்ளதாகவும் கூறினார்.

## கிழக்கிலிருந்து மாலைத்தீவுக்கு மணல் ஏற்றுமதி;

## சு.க அமைச்சருக்கும் மொட்டு எம்.பிக்கும் தொடர்பு

பா.நிரோஸ்



கிழக்கு மாகாணத்திலிருந்து மாலைத்தீவுக்கு மணல் ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரிவிக்கும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், ஶ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர் ஒருவருக்கும், மொட்டு கட்சி எம்.பிக்கும் இதில் தொடர்பு இருப்பதாகவும், கிழக்கு மாகாண ஆளுநரே மணல் ஏற்றுமதிக்கு ஒத்துழைப்புகளை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், சட்டவிரோதமாக கிழக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்படும் மணல் அகழ்வுகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் தான் எழுப்பிய வாய்மூல விடைக்கான வினாவுக்கு இதுவரையில் பதிலளிக்கப்படவில்லை என்றார்.

மேலும், மாலைத்தீவில் புதிய தீவு ஒன்றை அமைப்பதற்கு கிழக்கு மாகாணத்திலிருந்து மணல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அந்நிய செலாவணி நாட்டுக்குக் கிடைக்குமென பார்த்தல், அந்த டொலர் நாட்டுக்குக் கிடைப்பதில்லை எனவும் கூறினார். ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவருக்கும் இதில் தொடர்பு உள்ளது. ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே கிழக்கு மாகாணத்தின் மணல்களை மாலைத்தீவுக்கு ஏற்றுமதி செய்கிறார். கிழக்கு மாகாண ஆளுநரும் இதற்கு உதவி செய்கிறார் எனவும் தெரிவித்தார்.

கியூபா

# குழந்தைகளுக்கு தடுப்பூசி

இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தும் பணியை, உலகிலேயே முதன் முதலாக கியூபா அரசு தொடங்கியுள்ளது.

வெள்ளிக்கிழமை (03) முதல் 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தும் பணியை ஆரம்பித்த கியூபா, திங்கட் கிழமை (06) முதல் இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் இச் சேவையை விஸ்தரித்துள்ளது.

எனினும், கியூபாவில் குழந்தைகளுக்கு செலுத்தப்பட்டுவரும் தடுப்பூசிக்கு இதுவரை உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதமளவில், கியூபாவில் பாடசாலைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது அனைத்து சிறுவர்களுக்கும் தடுப்பூசி செலுத்திய பிறகே பாடசாலைகள் திறக்கப்படும் என்றும் கியூபா அரசு அறிவித்துள்ளது.







# பரா ஒலிம்பிக் வெற்றியாளர்களுக்கு பொற்கிழி

ஜப்பான் டோக்கியோ நடைபெற்ற 2020 பரா ஒலிம்பிக்ஸ் வெற்றியாளர்களின் வெகுமதி வழங்குவதற்கான திட்டத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடிய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான அமைச்சவைப் பத்திரம், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வினால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி, வெகுமதி திட்டத்துக்காக 106.625 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

டோக்கியோ 2020 பரா ஒம்பிக் போட்டியில் இலங்கை இரண்டு பதக்கங்களை வென்றது. இராணுவ அதிகாரியான தினேஷ் பிரியந்த ஆண்கள் ஈட்டி எஃப் 46 நிகழ்வில் தங்கப்பதக்கம் வென்றார் மற்றும் ஆண்கள் ஈட்டி எறிதல்- எஃப் 64 நிகழ்வில் சமிதா துலன் கொடிவாக்கு வெண்கலப் பதக்கம் வென்றார்.

பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கு 106.625 மில்லியன் ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளது.

அதன்பிரகாரம்.

தங்கப் பதக்கம் வென்றவர் - 50 மில்லியன் ரூபாய்

வெண்கலப் பதக்கம் வென்றவர் - 20 மில்லியன் ரூபாய்

4 வது - 8 வது இடம் - 2.5 மில்லியன் ரூபாய்

9 வது - 16 வது இடம் - 1 மில்லியன் ரூபாய் (நான்கு)

உலக சாதனை - 10 மில்லியன் ரூபாய்




பயிற்சியாளர்கள் - 19.125 மில்லியன் ரூபாய்

மேலும், இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த இருவருக்கும் பணப் பரிசு வழங்கப்படவுள்ளது. ஹேரத்துக்கு 10 மில்லியன் ரூபாய். லனுக்கு ரூ. 1 மில்லியன் ரொக்கப் பரிசு வழங்கவும் அங்கிகாரம் கிடைத்துள்ளது.




ஜப்பான் டோக்கியோவில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தினேஷ் பிரியந்த ஹேரத் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற சமித துலன் கொடிவாக்கு ஆகியோருக்கு ஜப்பானிலுள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றுவோர் மற்றும் அங்கு வாழும் இலங்கையர்கள் இணைந்து இரண்டு கார்களை அன்பளிப்பு செய்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான்



# ஆறு நாடுகளுக்கு தலிபான்கள் அழைப்பு

ஆப்கானிஸ்தானில் இதுவரை தங்கள் வசம் வராமல் இருந்த பஞ்சஷேர் மாகாணத்தையும், தாம் கைப்பற்றிவிட்டதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

தலைநகர் காபூலில் இருந்து 90 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் பஞ்சஷேர் மாகாணத்தின் எட்டு மாவட்டங்களையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாக தலிபான் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் ஷபிஹுல்லா முஜாஹித் நேற்று முன்தினம் (06) தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “மக்கள் அனைவரும் எங்களது சகோதரர்கள். அவர்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்கிறோம்” என்றார்.

இருப்பினும், தலிபான்களுக்கு அஞ்சி ஏராளமானோர் மலைப் பகுதிகளுக்கு தப்பிச் சென்றுவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இன்று ஆப்கானில் தலிபான்களின் புதிய அரசாங்கம் அமையலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

குறிப்பாக, முல்லா முஹமது அசன் அகுந்த் அரசாங்கத்தின் தலைவராக இருப்பார். முல்லா பராதரும், முல்லா அப்துஸ் ஸலாமும் துணைத் தலைவர்களாக இருப்பார்கள் எனவும் காபூல் உள்ளூர் ஊடகச் செய்தி வெளியாகி உள்ளது.

அத்துடன், புதிய அரசாங்கம் பதவி ஏற்கும் விழாவுக்கு பாகிஸ்தான், துருக்கி, கட்டார், ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகளுக்கு தாலிபான்கள் அழைப்பு விடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பிட்கொயின் நாணயம்

உலகில் முதன்முதலாக எல் சல்வடோர் (El Salvador) நாட்டின் அங்கிகரிக்கப்பட்ட நாணயமாக பிட்கொயின் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிட்கொயின்கள் அறிமுகமாகி 12 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், முதன் முதலாக ஒரு நாட்டில், அது நாணயமாக ஏற்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர்கள் புழக்கத்தில் உள்ள குறித்த நாட்டில், அதிக எண்ணிக்கையிலான மக்கள் பிட்கொயினை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டால், என்ன விதமான நன்மைகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

முதற்கட்டமாக 20 மில்லியன் டொலர் மதிப்புள்ள 400 பிட்கொயின்களை வாங்கி பயன்பாட்டுக்கு விட முடிவு செய்து, தற்போது 200 பிட்கொயின் வாங்கப்பட்டு உள்ளது.

மேலும், 200 பிட்கொயின் ஏ.டி.எம்களும் அந்நாட்டில் திறக்கப்பட்டுள்ளன. அங்கு பிட்கொயின்களை அமெரிக்க டொலராக மாற்றிக் கொள்ளலாம் எனவும் கூறப்படுகின்றது.



# பாகிஸ்தான் அணி அறிவிப்பு

பாபர் அஸாம் தலைமையிலான டி-20 உலகக் கோப்பைக்கான பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மூத்த வீரர்கள் பலர் இடம்பெறாதது அந்நாட்டு இரசிகர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டி-20 உலகக் கோப்பை - ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமனில் ஒக்டோபர் 17 முதல் நவம்பர் 14 வரை நடைபெறுகிறது. துபை, அபு தாபி, ஷார்ஜா, ஓமன் என நான்கு பகுதிகளில் டி-20 உலகக் கோப்பை நடைபெறவுள்ளது. இந்தியாவில் நடத்தப்படவிருந்த டி-20 உலகக் கோப்பை போட்டி, கொரோனா சூழல் காரணமாக ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

## மூத்த வீரர்கள்...

டி-20உலகக் கோப்பைக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பாபர் அஸாம் தலைமையிலான அணியில் சோயிப் மாலிக், சர்ஃபராஸ் அஹமது, வஹாப் ரியாஸ் ஆகிய மூத்த வீரர்கள் இடம்பெறவில்லை. தொடக்க வீரர் சர்ஜீல் கான், ஆல்ரவுண்டர் ஃபஹீம் அஷ்ரம் ஆகியோரும் தேர்வாகவில்லை. ஆசிப் அலி, குஷ்தில் ஷா ஆகிய இருவரும் டி-20உலகக் கோப்பை மற்றும் நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான டி-20 தொடர்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

## பாகிஸ்தான் அணி...

பாபர் அஸாம், ஷதாப் கான் (துணை கேப்டன்), முகமது ரிஸ்வான் (விக்கெட் கீப்பர்), ஆசிப் அலி, சோயிப் மக்சூட், அஸாம் கான் (விக்கெட் கீப்பர்), குஷ்தில் ஷா, முகமது ஹபீஸ், முகமது வாசிம் ஜூனியர், ஷாஹீன் அப்ரிடி, ஹாரிஸ் ராஃப், ஹசன் அலி, இமாத் வாசிம், முகமது ஹஸ்னைன். மாற்று வீரர்கள்: உஸ்மான் காதர், ஷாநவாஸ் தானி, ஃபகார் ஸமான்.





பாகிஸ்தான் பயிற்சியாளர்கள்

# மிஸ்பா, வக்கார் யூனுஸ் திடீர் விலகல்

டி20 உலகக்கோப்பை போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களில் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர்களான மிஸ்பா உல் ஹக், பந்துவீச்சுப் பயிற்சியாளர் வக்கார் யூனுஸ் பதவி விலகினர்.

தங்களின் பதவி விலகல் முடிவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளனர்.

உலகக்கோப்பை போட்டி ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், மிஸ்பா உல் ஹக், வக்கார் யூனுஸ் விலகியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானுக்கு நியூஸிலாந்து அணி எதிர்வரும் 11 ஆம் திகதி பயணம் மேற்கொண்டு ஒருநாள், டி20 தொடரில் விளையாட உள்ளது. இதற்காக பாகிஸ்தான் அணி, எதிர்வரும் 8 ஆம் திகதி பயிற்சிக்காக இஸ்லாமாபாத்தில் கூட உள்ளது.

தலைமைப் பயிற்சியாளர்களாக மிஸ்பாவும், வக்கார் யூனுஸும் கடந்த 2019-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்தான் நியமிக்கப்பட்டனர். இருவரின் பதவிக் காலம் முடிய இன்னும் ஓராண்டு காலம் இருக்கும்போதே விலகியுள்ளனர்.

பிரித்தானியா



# வாடிக்கையாளர்களை அதிரவைத்த ‘வாட்டிய உருளைக் கிழங்கு‘

பிரித்தானியாவில் உள்ள ‘The Botanist‘ என்ற உணவகம், அண்மையில் விநோத அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த உணவகத்தின் சிறப்புத் தயாரிப்பான வாட்டிய (Tosted) உருளைக் கிழங்கை சுவைத்துப் பார்த்து, விமர்சனம் (Review) சொல்ல ஆட்களைத் தேடி வருவதாக அறிவித்திருந்தது.

வாடிக்கையாளர்களுக்கு சுவையான உணவை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இவ்அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இவ்வேலைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் செப்டெம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் 500 சொற்களுக்கு மேற்படாமல் குறித்த உணவு தொடர்பாக விமர்சனம் எழுத வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுகுறித்து டிக்டொக் அல்லது இன்ஸ்டாகிராமில் ஒரு நிமிடத்துக்கு மேற்படாதவாறு வீடியோவையும் பதிவிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வகுப்பறை...

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பிறகு அறிவிக்கப்பட்ட மாற்றங்களில் ஒன்றுதான் இருபாலர் கல்விக்குத் தடையாகும். இதனால், பல்கலைக்கழக வகுப்பறைகளுக்குள் மாணவ, மாணவிகளுக்கு இடையே திரையிடப்பட்டுள்ளது.

ஜப்பான்

# ஜப்பானின் அடுத்த பிரதமர் கோனோ?

ஜப்பானின் பிரதமரான யோஷிஹிடே சுகா, தனது பதவியிலிருந்து விலக முடிவு செய்துள்ளதாக அண்மையில் தெரிவித்தார்.

இதையடுத்து, அடுத்த பிரதமராக யாருக்கு அதிக வாய்ப்பு உள்ளது என்பது பற்றி அந்நாட்டின் ‘கொய்டோ’ செய்தி நிறுவனம் தொலைபேசி மூலம் நடத்திய கருத்துக்கணிப்பு முடிவுகளை நேற்று முன்தினம் (06) வெளியிட்டது.

1,071 பேர் பங்குபற்றிய இக்கருத்துக் கணிப்பில் 32 சதவீதம் பேர் அமைச்சர் டாரோ கோனோவுக்கும் 27 சதவீதம் பேர் பாதுகாப்புத் துறை முன்னாள் அமைச்சர் ஷிகெரு இஷிபாவுக்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர். வெளியுறவு முன்னாள் அமைச்சர் ஃபுமியோ கிஷிடாவுக்கு 19 சதவீத ஆதரவு கிடைத்துள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 08 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.